**தலைப்பு 122 – காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்கியிருக்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டி இருந்தும் அந்த தேவைப்பாடுகளை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய வருமானங்கள் தமது நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டுநிதியாகக் கருதி பதிவு செய்யப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்தும் அமைச்சினால் சேகரிக்கப்பட்ட ரூபா 19,635,935 தொகை ஏனைய வருமானமாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காட்டப்படுதல் வேண்டும். | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்களின் கீழ் (ii) ஆம் உப பிரிவின் பிரகாரம் ரூபா 19,635,935 பணம் ஏசீஏ-3 படிவத்தின் கீழுள்ள கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

### 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேலே 1.6.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரும் | சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளிலுள்ள புள்ளி விபரங்களை | அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடமிருந்து 2018 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட தலைப்புக்களின் கீழுள்ள மீதியை |

| | | |
|---|---|---|
| போது திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளில் குறிப்பிட்ட புள்ளி விபரங்களினை அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்பு பெறுவனவுகள் மீதியானது திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் ரூபா 633,792 ஆக இருந்த போதிலும், அந்த மீதி மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் பிரகாரம் ரூபா 36,373,077 ஆக நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததினால் ரூபா 35,739,285 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அத்திகதியில் உள்ளவாறான வைப்பு கொடுப்பனவுகள் மீதி திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் ரூபா 104,665,235 ஆக இருந்தும் மாதாந்த கணக்கு பொழிப்புக்களின் பிரகாரம் ரூபா 36,243,705 ஆக நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 68,421,530 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | முன்கொண்டு வருதல் அவதானிப்புக்களிலுள்ள சிக்கல்களுக்கு காரணமாக உள்ளது. சில தடவைகளில் இது சம்பந்தமாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியிருந்தும் உரிய சரிசெய்தல்கள் செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், தலைப்பு 122 இன் கீழ் ஆண்டின் போது மேற்கொண்ட வரவு மற்றும் செலவு பெறுமதிகள் தலைப்பு 153 இல் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க திறைசேரி அச்சு கூற்றுக்கள் மற்றும் அமைச்சின் ஏடுகளின் பிரகாரம் வரவு மற்றும் செலவு பதிவுகள் சரியாக பதியப்பட்டுள்ளன. |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திறைசேரி அச்சுக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கின் கீழுள்ள ரூபா 3,522,265 மீதி காட்டப்பட்டிருந்தும் அத்திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வைப்பு விடய நான்கு குறியீடுகளின் கீழ் ரூபா 1,496,601 மீதி சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. | ஒப்பீடு செய்து வித்தியாசத்தை சரி செய்தல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் அமைச்சின் 153 ஆம் இலக்க தலைப்பின் கீழ் 2018 ஆம் ஆண்டிற்காக காணிகள் மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் 122 ஆம் இலக்க தலைப்பின் கீழும் மீதிகள் முன்கொண்டு வரப்பட்டது என்று அந்த அவதானிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சிக்கலுக்கு காரணமாகும். இது தொடர்பான அரச கணக்குகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியிருந்தும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் ஏடுகளின் பிரகாரம் மேற்கூறிய கணக்கின் வரவு மீதி ரூபா 55,150,394 ஆக இருந்தும் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் வரவு மீதி ரூபா 55,104,411 ஆகும். அதற்கிணங்க ரூபா 45,983 வித்தியாசம் அவதனிக்கப்பட்டதுடன் அந்த வித்தியாசத்திற்கான காரணமாக 2016 இலிருந்து 2018 வரையான ஆண்டுகளில் இனங்காணப்பட்ட வருடாந்த செலவு வைத்தல்களாக கணக்கில் காட்டப்பட்டிருந்தது. அந்த செலவு வைத்தல்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏடுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளுக் கிடையிலான வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். | வித்தியாசத்தை தேடிப் பார்த்து தீர்த்து வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 1.6.4 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும். நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 23,856,351 தொகையான பொறுப்புக்கள் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்களை நாளாந்தம் பரீட்சிக்க கூடிய வகையில் ஒரு பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | அவதானிப்புக்களில் சுட்டிக் காட்டப்பட்ட பொறுப்புக்கள் ஏனைய திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளுக்குரிய பொறுப்புக்களாகும். |

## 1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 104(4) இன் பிரகாரம் 2015-2018 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 09 வாகன விபத்துக்களுக்குரிய பரிசோதனைகள் நடாத்தப்பட்டு நட்டங்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை நிர்ணயித்து அதற்குரிய இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய காலத்திற்குள் விசாரணைகளை நடாத்தி அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும். | நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழ் இறுதி விசாரணைகளை நடாத்தி விசாரணை சபையின் சிபார்சுகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

### 1.6.7 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தின் செயலாளரின் 2016 மே 03 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியணியில் தட்டெழுத்தாளர் பதவிக்கான மாதாந்த தகைமை பெற்ற சம்பளம் ரூபா 26,338 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அந்த உத்தியோகத்தருக்கு 2016 ஆம் ஆண்டில் ஒரு மாதத்திற்கு ரூபா 86,077 தொகையும் 2017 ஆம் ஆண்டில் ஒரு மாதத்திற்கு ரூபா 85,987 தொகையும் 2018 ஆம் ஆண்டில் செப்தெம்பர் வரை ஒரு மாதத்திற்கு ரூபா 116,477 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதி வரை தட்டெழுத்தாளர் பதவிக்கு செலுத்த வேண்டிய சம்பளத்தின் அளவை விட ரூபா 2,483,933 பணம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | நாளதுவரையாக் கப்பட்ட சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கு இணங்க சம்பளம் செலுத்தப்படுதல் வேண்டும். | 1989 மார்ச் 02 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய சம்பளம் அமைச்சின் மூலம் மீளளிப்புச் செய்யப்படுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர் பதவியணியின் சம்பளம் அந்த பதவிக்குரியதனை விட மிகையாகவும் இந்த நடைமுறையில் ஏதாவது குறைபாடு இருக்குமாயிருந்தால் ஆலோசனை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது நிதிப்பிரமாணம் 50(11) இன் பிரகாரம் முடியுமான அளவு முழுமையாகவும் சரியாகவும் மதிப்பீட்டினைத் தயாரித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும், செலவு விடயங்களுக்காக அதிக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக 5 செலவு விடயங்களின் ரூபா 371,076,460 தொகையான நிதிஏற்பாடு ஏனைய செலவு விடயங்களுக்கு நி.பி 66 இன் மூலம் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டதன் பின்னரும் தேறிய நிதி ஏற்பாட்டில் 24 சதவீதம் சேமிப்பாக இருந்தது. அவ்வாறே நி.பி 66 இன் மூலம் ஒரு செலவு விடயத்திற்கு ரூபா 3,750,000 தொகை ஏனைய செலவு விடயங்களிலிருந்து மாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த அளவில் 61 சதவீதம் அதாவது ரூபா 2,301,846 சேமிக்கப்பட்டிருந்தது. | செலவுகள் தொடர்பாக முறையான ஆய்வுகளின் பின்னர் போதியளவில் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். | அவ்வாறான நிலைமையை குறைத்துக் கொள்வதற்கு பதிவு செய்து கொள்கின்றேன். |
| (ஆ) | காணிகள் மற்றும் காணிகளை மேம்படுத்தல் செலவு விடயத்திற்காக குறைநிரப்பு நிதிஏற்பாட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 21,600,000 நிதிஏற்பாடு செலவு செய்யப்படாது முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | செலவுகளைத் திட்டமிட்டு தேவையன அளவுக்கு மாத்திரம் நிதிஏற்பாடு பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். | அனைத்து நிதிஏற்பாடுகளுக்காக பிரதேச அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் அவற்றில் காணப்பட்ட கட்டுநிதி சிக்கல் காரணமாக சேமிக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் செயல் நடவக்கைத்திட்டத்தில் அனைத்து செயற்பாடுகளினதும் எதிர்பார்த்த பெறுபேறுகள் காட்டப்பட வேண்டிய போதிலும், அமைச்சின் பிரதான செயற்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்த்த பெறுபேறுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. எதிர்காலத்தில் உள்ளடக்கப்படும். |
| (ஆ) அமைச்சினால் 2018 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் செயற்பாடுகளும் அதற்குரிய இலக்குகளும் அதற்குத் தேவையான நிதிஏற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அத்திணைக்களத்தால் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் ரூபா 16,820,000 நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியதுடன் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்து வதற்காக உரிய நிறுவனத்தின் மூலம் இனங்காணல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதிருந்தும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் பணம் விடுவிக்கப்பட்டது. |
| (இ) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக அமைச்சு செயற்படும் முறைமை அல்லது செயற்பாடுகள் தொடர்பாக 2018 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்படாதிருந்ததுடன் அது சம்பந்தமாக அமைச்சின் செயல் முன்னேற்றமும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அமைச்சினால் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,163,965 செலவு செய்யப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிதிஏற்பாட்டுடன் உரிய செயற்பாடுகளும் இலக்குகளும் குறிப்பிடப்படுதல் வேண்டும். | பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துதல் அமைச்சின் பிரதான பணியாகும். அதற்காக அமைச்சில் காணப்படுகின்ற கணனி முறைமை பயன்படுத்தப்பட்டதனால் கணனி வலையமைப்பு முறைமையைப் புதுப்பித்தல் பிம்சவிய பிரிவின் இடவசதிகளை |

| | | |
|---|---|---|
| | | ஒதுக்கீடு செய்தல், உரிமைச் சான்றிதழ் பத்திரங்களை அச்சிடுதல் என்பவற்றிற்காக செலவு செய்யப்பட்டுள்ளன. |

**3.2 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1950 இன் 09 ஆம் இலக்க காணிகள் அதிகாரச்சட்டத்தின் 38(அ) சட்ட விலக்கு கூறுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் அபிவிருத்தி நடைமுறைகளுக்காக காணிகளை தனியார் துறையிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நடைமுறைகளானது காணிகள் அமைச்சு, அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்துகின்ற நிறுவனம், மதிப்பீட்டுத் திணைக்களம், பிரதேச செயலகம், நில அளவையாளர் திணைக்களம், அது தொடர்பான ஏனைய நிறுவனங்கள் அதற்காக முறைப்படியான வேலைத்திட்டமும் காலப்பகுதியையும் இனங்காண்தல் இடம்பெறவேண்டிய போதிலும் அவ்வாறான வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் அண்டு வரையான காலப்பகுதியில் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட 8,029 கோவைகளில் நடவடிக்கைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்த கோவைகள் 1,368 என்ற அளவான குறைந்த எண்ணிக்கையாகும். அதற்கிணங்க 1970 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளுக்காக இழப்பீட்டுக் கொடுப்பனவு தாமதித்ததன் காரணமாக மீளாய்வாண்டில் இழப்பீட்டு வட்டியாக ரூபா 452,708,477 தொகையை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக | அமைச்சு காணிகளை பெற்றுக் கொள்ளும் நடைமுறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அமுல்படுத்தும் நிறுவனமாக இருப்பதனால் காலத்தை நிர்ணயிப்பதுடன் முறையான நடைமுறையைத் தயாரிப்பதன் மூலம் காணிகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் தாமதமின்றி இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் | காணிகளைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையைப் பூரணப்படுத்துவதற்காக ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுப்பதனால் காணிகளைப் பெற்றுக் கொள்ளும் கோவைகளை திறக்கும் ஆண்டிலேயே அனைத்து பெறுகைகளுக்கும் இழப்பீடு செலுத்தி பூர்த்தி செய்யும் இயலுமை இல்லை. |

கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் தாமதித்தமைகளில் சில கீழே தரப்படுகின்றன.

(i) இகினிமிடிய தொழில்முயற்சி 1987 ஆம் ஆண்டிலிருந்து 35 ஆண்டுகள் எடுத்திருந்தும் இழப்பீடுகள் செலுத்தப்படாமை

(ii) ஹொரண நகர அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக இழப்பீடு செலுத்துவதற்கு 10 ஆண்டுகள் காலம் எடுத்திருந்தமை.

(iii) களுத்துறை ஜாவத்தை சிறைச்சாலையை விரிவுபடுத்தும் செயற்திட்டத்திற்காக இழப்பீட்டை கொடுப்பனவு செய்வதற்கு 12 ஆண்டுகள் எடுத்தமை.

(iv) ஜேதவன புனித பூமியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் 1999 ஆம் ஆண்டிலிருந்து 16 ஆண்டுகள் தாமதித்து இழப்பீடு செலுத்தப்பட்டமை.